காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காந்தி நகர் பேரூராட்சிப் பகுதியிலுள்ள பொதுக் குழாய்கள்.

*வினா எண் 374. திரு. என் ஏ. பூங்காவனம் :

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காந்திநகர் பேரூராட்சியில் உள்ள பொதுக்குழாய்கள் அனைத்தையும் குடிநீர்-வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர், வேலூர் அவர்கள் உத்தரவின்படி அப்புறப்படுத்தியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) காந்தி நகர் பேரூராட்சியில் தேவைக்கு அதிகமான பொதுக் குழாய்கள் போடப்பட்டுத் தண்ணீர் வீணாக்கப்படுவதைத் தவிர்க்க, காட்பாடி குடிநீர்த் திட்டத்தினால் பயன்பெறும் காந்திநகர் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் நிர்வாக அதிகாரிகள் காட்பாடி ஒன்றிய ஆணையர், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் ஆகியோர் கூடி ஆலோசித்துத் தேவைக்கு அதிகமாக இருந்த 40 குழாய்களை எடுக்க முடிவு செய்து மேற்படி நிர்வாக அதிகாரிகள் ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த 40 குழாய்கள் எடுக்கப்பட்டன. தற்போது இங்கு 31 குழாய்கள் பயனுள்ள வகையில் இயங்கி வருகின்றன.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த காந்திநகர் என்பது என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பகுதி, சென்ற ஆண்டு வறட்சி நிலை ஏற்பட்டபொழுது, குடிநீர்-வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் திரு. நாராயண ராவ் அவர்கள்—இங்கே அமைச்சர் சொன்ன தகவல் நான் அவர் தவறாகச் சொல்வதாகச் சொல்லவில்லை, கொடுத்த தகவலை மட்டும்தான் சொல்கிறார் என்று நினைக்கிறேன்—இந்தப் பேரூராட்சி ஒன்றியத்தினுடைய ஈ.ஓ. ஒருவர் இருக்கிறாரே, தலைமை அலுவலர், அவரையும் கேட்காமல், இவரே உத்தரவிட்டு, 23 குழாய்களைப் பஞ்ச நேரத்தில், வறட்சி நேரத்தில், தண்ணீர் இல்லாத நேரத்தில் மூடி

1982 மார்ச் 5]

விட்டார்கள், அப்பொழுது முறையீடு செய்த பிறகு சிலவற்றை நிறுத்தினார்கள். ஆகவே, இதனைக் கலந்து செய்தார் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, அரசு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—மூடிய குழாய்களை மீண்டும் திறப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்க முன்வருவார்களா ? அதை அமுலாக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஊருக்குச் சாதாரணமாக, பப்ளிக் பவுன்டன் என்று சொல்லக்கூடிய, பொதுக்குழாய்கள், எவ்வளவு இருக்க வேண்டுமென்று, அதிகாரிகள் பரிசோதனை செய்திருக்கிறார்கள். 71 குழாய்கள் இருப்பதால் தண்ணீர் தான் வீணாகிறது, தண்ணீர் வீணாவதால், மக்களுக்குத் தண்ணீர் ஒழுங்காகக் கிடைக்கவில்லையென்று சொல்லி, 40 குழாய்களை மூடிவிட்டு, இப்பொழுது 31 குழாய்கள்—பயனுள்ள வகையில்—அதைத்தான் கவனிக்க வேண்டும் தற்போது 31 குழாய்கள் பயனுள்ள வகையில்—இயங்கி வருகின்றன என்பதை ாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : துணைத் தலைவர் அவர்களே, முன்னால் அந்தக் குழாய்களை அமைக்கிறபொழுது, ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி மன்றமும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை வைத்தில்லாத நிலையில், தேவை என்ற நிலைமையில்தான் போடப்பட்டன. காசு கொடுப்பவர்கள் மட்டும்தான் தண்ணீர் பயன்படுத்த வேண்டுமென்ற நிலைமைக்குக் குடிநீர் -வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் சென்றதால்தான் மூடினார்கள். ஆகவே, அது உண்மையான தகவல் அல்ல—ஆகவே, மூடியகுழாய்களை மீண்டும் திறக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல் உண்மையான தகவல் இல்லை, மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒரு மனுவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்களானால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி, அது உண்மையான தகவலா என்பதைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 71 புதுக் குழாய்கள் அமைத்ததாகவும், பயனுள்ள வகையில், 40-ஐ விட்டுவிட்டு, 31-ஐ அங்கு வைத்திருப்பதாகச் சொன்னார்கள். 71-ஐ அமைக்க யார் அனுமதித்தார்கள் எப்படி அனுமதி அளித்தார்கள் ? அங்கே பொது மக்களுக்குச் சரியாகத் தண்ணீர் கிடைக்கவில்லையென்ற காரணத்தினாலே, குடி-

நீர்-வடிகால் வாரிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ததால், அந்த விரோதத்தின் காரணமாக, அந்தக் குழாய்கள் எடுக்கப்பட்டதாகக் கூறப்படு கிறதே, அதுபற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருக்ற தகவலின்படி 71 குழாய்கள் தற்காலிகமாகத்தான் பொறுத்தப்பட்டன. உறுப்பினர் சொன்னமாதிரி அஜிடேஷன் பிரஷருக்காகத் தற்காலிகமாகக் குழாய்களை வைத்திருக்கலாம். பிறகு, தீர ஆலோசித்து பயன் உள்ள தண்ணீரை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் 31 குழாய் கள் போதும் என்று அதிகாரிகள் முடிவெடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் நான் மறுபரிசிலனை செய்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் கடன் பத்திரம் வெளியிட்டுப் பணம் திரட்டுவதற்கான அரசின் அனுமதி.

* வினா எண் 375—திரு. பெ. சு. திருவேங்கடம் . மாண்புமிகு தொழி லாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் கடன் பத்திரம் வெளியிட்டு அதன் மூலம் கடன் திரட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(அ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) தொகை எதற்கு செலவழிக்க உத்தேசம் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் பொதுச் சந்தையில் .open market) கடன் வாங்கவும் அதற்கான பத்திரங்கள் வழங்கவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) நடப்பு ஆண்டில், அதாவது 1981-82-ல், தமிழக அரசு தனது ஆணை எண் 1862, ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 9-11-81 ல் இவ்வாரியம் பொதுச் சந்தையில் கடன் எழுப்பிய ரூபாய் 110.00 இலட்சங்களுக்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

(இ) இவ்வாறு பொதுச் சந்தையில் எழுப்பிய கடன் தொகையை இவ் வாரியம் நீர் வழங்கல், கழிவு நீரகற்றல் ஆகியவற்றின் முதலீட்டுப் பணிக்காக செலவழிக்க உத்தேசம் செய்துள்ளது.